தெற்கு ஆஸ்திரேலிய

# தமிழர் குரல்

# TAMIZHAR KURAL

NOVEMBER 2020

## Publishing Team

| | |
|---|---|
| **Chief Editor** | Srirama Srinivasan J |
| **Editorial team** | Joseph Xavier David<br>Prabhu Francin Singaraj<br>Senthil Rajan Chidambaranathan<br>Chris Antony |

## ATA Management Committee

| NAME | POSITION |
|---|---|
| Joseph Xavier David | President |
| Jagadeesan Manimangalam | Vice President |
| Chris Antony | Secretary |
| Senthil Rajan Chidambaranathan | Treasurer |
| Jude Nirmalaraj | Public Officer |
| Don Bosco Arockiaswamy | Committee Member |
| Raj Ganesh Divya Sekar | Committee Member |
| Manikandan Shanmugasundaram | Committee Member |
| Sreenivasan Joshi | Committee Member |
| Dhachina Shanmuga Moopper | Committee Member |
| Karthik Ranganathan | Committee Member |
| Raja Kannusamy | Committee Member |
| Adrian Jeremiah | Committee Member |
| Srinivasan Narayanaswamy (Srini) | Committee Member |
| Arokiaraj Sagayam Selvaraj (Sagay) | Committee Member |
| Prabhu Francin Singaraj | Technical Director |
| Kathir Gurusamy | Technical Director |
| Balasubramani Rajinder | Commercial Director |

## தலைவர் உரை - President’s message



அனைவருக்கும் வணக்கம்,

ஏறக்குறைய கடந்த 15 ஆண்டுகளாக அடிலைட் தமிழ்ச்சங்கம் பல்வேறு ஏற்றத்தாழ்வுகளைக் கடந்து இன்று பீடு நடை போடுவதற்கு உங்களின் ஈடு இணையற்ற ஆதரவும், ஒத்துழைப்புமே காரணம். தேர்தல் அதிகாரி உட்பட சங்கப் பொறுப்பாளர்கள் அனைவரும் சனநாயகப்படி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டதே சங்கத்தின் முக்கிய நிகழ்வாகும். அதற்காக உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இக்குழு பொறுப்பேற்ற குறுகிய காலத்தில் தமிழர் குரல், மாணவர் அமைப்பு, மகளிர் அமைப்பு, போன்ற சங்க வளர்ச்சிக்கான அடிப்படை கட்டமைப்புகளை மீண்டும் புதுப்பொலிவுடன் தொடங்கி இருக்கிறோம். மேலும் சங்கத்தின் இணையதளம் (Website) புனரமைப்புச் செய்து அதைச் சரியான செயல்பாட்டிற்கு கொண்டுவந்துள்ளோம். எங்கள் நிர்வாகக்குழு உறுப்பினர்களின் விருப்பத்திற்கும் திறமைக்கும் ஏற்றபடி பணிகள் ஒதுக்கப்பட்டு அனைவரும் மிகுந்த ஈடுபாட்டுடன் இச்சேவைகளை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு நம் அனைவரின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்கலைக்கழகத்தில் படித்த தமிழ் மாணவனுக்கு அண்மையில் நடந்த துயர சம்பவத்திற்கு உதவி எனக்கேட்டவுடன் அள்ளிக்கொடுத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த 2020ம் ஆண்டு உலகத்தையே உலுக்கிய COVID 19 பிரச்சனைகளை சமாளித்து கடந்த 18.10.2020 அன்று தெற்கு ஆஸ்திரேலியா தமிழ்ப்பள்ளி மீண்டும் திறக்கப்பட்டு வகுப்பறை கற்பித்தல் பணி தொடங்கியுள்ளது. அதற்காக பள்ளி நிர்வாகி, முதல்வர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வோம். பல தனி மனிதனின் தேவையே ஒரு சமூகத்தின் தேவையாகும். அத்தேவைகளை அடைய நாம் ஒரு சங்கமாக இணைந்து செயல்பட வேண்டியது அவசியமாகும். அதனடிப்படையில் அடிலெய்டில் வாழ்கின்ற தமிழ் மக்களும், குடியேறுகிற மக்களும் சங்கத்தில் இணைந்து தங்களால் இயன்ற பணிகளைச் செய்ய முன்வரவேண்டும் என்பதே எனது விருப்பமாகும். அதனால் உங்களுக்குத் தெரிந்தவர்களை சங்கத்தில் இணைக்க உதவுங்கள். மேலும் சங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்ற முயற்சிகளுக்கு உங்களால் முடிந்த உதவிகளைச் செய்ய விரும்பினால் தயவு செய்து எங்களுக்குத் தெரிவியுங்கள். நமது ஆதரவே நமது பலம். நன்றி.

அனைவருக்கும் எங்களது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள் .
அன்புடன், ஜோசப் சேவியர், தலைவர்








# மகளிர் மட்டும்

## ATA Women's wing

அடிலைட் தமிழ்ச்சங்கத்தின் பெண்கள் பிரிவு 01.11.20 அன்று டாரன்ஸ்வில் பள்ளியில் சிறப்பாக தொடங்கப்பட்டது. இதன்மூலம் தமிழ்மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடுகளை முன்னெடுத்து பணியாற்ற முன்வந்துள்ள மகளிர் அணியின் பொறுப்பாளர்கள்.



| NAME | POSITION |
|---|---|
| Catherine Jawahar | Event coordination and organising |
| Grace Rayappu | |
| SriDevi Ashok Kumar | |
| Vijaya Lakshmi | |
| Anuradha Senthil Rajan | Finance |
| Anne Priya | Events |
| Raji Vimal | |
| Dakshaa Raji | |
| Indra Rajesh | |
| Jagathiswary | Youth Representative |

**குறிக்கோள் மற்றும் நோக்கங்கள்**

- பன்முக கலாச்சாரத்தில் பெண்கள் பங்கேற்கவும் அவர்களின் செல்வாக்கினால் இச்சமுதாயத்தில் மாற்றங்கள் கொண்டு வரவும் இந்த மகளிர் பிரிவு ஊக்குதலை அளிக்கும்.
- திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் மூலமாக பெண்களின் தொடரமைப்பு மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியை ஆதரிக்க.
- பெண்களின் வளர்ச்சிக்கான நிகழ்வுகள், கல்வி மற்றும் தொழில்முறை நடவடிக்கைகளை ஒழுங்கமைக்க.
- ஆஸ்திரேலியாவில் பெண்கள் உரிமைகள் குறித்த விழிப்புணர்வை உருவாக்க.
- பெண்களை பல்வேறு செயல்களில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களுக்கு அதிகாரம் அளிக்க.
- பன்முக கலாச்சாரத்தில் பெண்கள் பங்கேற்கவும் அவர்களின் செல்வாக்கினால் இச்சமுதாயத்தில் மாற்றங்கள் கொண்டு வரவும் இந்த மகளிர் பிரிவு ஊக்குதலை அளிக்கும்.
- ஒருமைப்பாடு, நேர்மை ஆகியவற்றை நாங்கள் மதிக்கிறோம், தனித்துவமான பங்களிப்பை அங்கீகரிக்கிறோம்.
- அனைவரையும் சமமென வரவேற்கிறோம்.
- பொறுப்புணர்வை மதித்தல் மற்றும் தொடர்ச்சியான பிரதிபலிப்பு மற்றும் மேம்பாடு மூலம் தரத்தை மேம்படுத்தல்.

**தமிழராய்.....தமிழர் குரல்**

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்."
என்றார் பாரதி
பூமிப்பந்தின் தென்கோடியில்
தனிப்பெரும் தீவுக்கண்டமாம் ஆஸ்திரேலியாவில்
அதிலும் தனித்துவமாய்...தெற்கு ஆஸ்திரேலியாவில்
தரணி ஆளும் "தமிழ்"என்னும்
ஒற்றைச்சொல்லால் ஒன்றுபட்டுள்ள நாம்
தித்திக்கும் தேனமுதாம் நம் தமிழ்
நம்மோடு நின்று விடாமல்....
பாரதி கூறிய கலைச்செல்வங்கள்
நம் தமிழ் மொழிக்கும் சொந்தமாகிட
அரிய செல்வமாம் தமிழ் மொழியை
சிந்தாமல் சிதறாமல் அதன் அழகியலோடு
நம் தலைமுறையினருக்குத் தந்திடுவோம்
நம் தலைமுறையினர், தங்கள் விஞ்ஞான, தொழில்நுட்ப
அறிவுக்களஞ்சியங்களை தமிழ் மொழியில்
சேர்த்திட நாம் துணை புரிந்திடுவோம்
பாரதியின் கனவை நனவாக்கிடுவோம்
தரணி எங்கும் ஒலிக்கும் அமிழ்தமாம்
தமிழர்களின் குரல்கள்
தெற்கு ஆஸ்திரேலியா மண்ணிலும்
தலைமுறை தலைமுறையாக ஒலிக்கட்டும்...
தரணி உள்ள காலம் மட்டும்

ஜெனிவி ம.ஹெ.


Chennai Palace
Indian
Restaurant








119 Walkerville Terrace,
Walkerville South Australia 5081,
For enquiries: (08) 7002 8000




**தமிழ் தந்த உறவு**

காலம் பொன்போன்றது, கடமை கண்போன்றது என்ற பழமொழியானது ஆஸ்திரேலியாவில் வாழும் நமக்கு நன்றாகவே பொருந்தும். காரணம் வாரத்தில் ஐந்து அல்லது ஆறு நாள் வேலை ஒரு நாள் ஓய்வு என்ற அடிப்படையிலேயே அதிகமானோர் வாழ்ந்து வருகின்றோம். கிடைக்கின்ற ஒன்றிரண்டு ஓய்வு நாட்களில் வீட்டுவேலை, குடும்பக்கடமை, பிள்ளைகளுக்கு பலவகையான சிறப்பு வகுப்புகள், பொது வேலைகள் என இவற்றையெல்லாம் செய்தபிறகே பெற்றோர்களாகிய நாம் உடற்பயிற்சி, நடைப்பயிற்சி போன்ற செயல்களைச் செய்ய முடிகின்றது. இப்படித்தான் நான் இருக்கின்ற உட்வில் (Woodville) பகுதியில் நேரம் கிடைக்கும் போது நடைப்பயிற்சி செய்வேன். அப்படிச் செல்லும்போது தமிழ்ப் பாடல்களைக் கேட்டுக் கொண்டோ அல்லது சில நேரங்களில் தொலைபேசியில் தமிழில் பேசிக்கொண்டோ கவனமாக நடந்து செல்வேன்.

இப்படி ஒருநாள் போகும்போது ஒருவர் தன் வீட்டிற்கு முன்னால் உள்ள தோட்டத்தில் வேலை செய்யும் சமயத்தில் நான்தமிழில் பேசிக்கொண்டு செல்வதைக்கேட்டிருக்கிறார். மற்றொருநாள்அதே தெருவில் நான் தமிழ்ப் பாடலை சற்று சப்தமாக கேட்டுக்கொண்டு செல்லும்போது பாடலின் சப்தத்தைக் கேட்டு அவர் தனது வாசல் அருகே வர, நான் அவர் வீட்டைக் கடக்கும்போது அவர் முன்னால் வந்து சார், வணக்கம்! என்றார். நான் சற்று ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சியுடன் வணக்கம்! என்றேன் மிகுந்த உற்சாகத்துடன். பிறகு ஒருவரை ஒருவர் நலம் விசாரித்துக்கொண்டு குடும்பம், வேலை, வாழ்க்கை இவைகளைப்பற்றி பேசிவிட்டுச் சென்றேன். இன்று அவர் எனது நல்ல நண்பர்களில் ஒருவராக உள்ளார்.

நாம் மனிதனாகப் படைக்கப்பட்டிருப்பது பொது அடையாளம். ஆனால் நம்மை யாரென்று தனி அடையாளம் காட்டுவது நம் தாய்மொழியே. அதுவும் உலகின் முதன்மையான, பழமையான மொழியாம் தமிழில் பேசுவது நமது சிறப்பு அடையாளம். உலகில் இன்று பழமையானவற்றை எவ்வளவு பத்திரமாக பாதுகாத்து வருகின்றார்கள் என்பதை அனைவரும் அறிவோம். எங்களிடையே ஏற்பட்ட உறவு தோற்றத்தை வைத்து வரவில்லை. மாறாக மொழியை வைத்தே வந்துள்ளது. இதுபோன்ற அனுபவங்கள், வாய்ப்புகள் நம் ஒவ்வொருவருக்கும் தினசரி வாழ்க்கையில் நடக்கும். எனது வேண்டுகோள் என்னவென்றால் வேலை செய்யும் இடங்களைத் தவிர்த்து வீட்டில், பொதுவான இடங்களில் தெரிந்தவர்களோடு, குறிப்பாக நம் பிள்ளைகளோடு தமிழில் பேசுவோம். நான் இதில் ஒன்றுமே செய்யவில்லை. என்மொழியில் பேசினேன். அவ்வளவுதான். அதனுடைய பலனோ புது உறவு.

ஆம் ! தமிழ் என்பது மொழி அல்ல. உறவு.

அன்புடன், ஜோசப் சேவியர்

**The Festival of Lights**

## ATA- Deepavali

Date: 21st November 2020
Time: 4:30 pm for a 5:00 pm start – 9.15 pm

Venue: Angkor Hall, 376 – 386 Salisbury Highway, Parafield Gardens.

Performances will include Classical Dance, Folk Dance, Cinematic Dance, Singing, Drama, Music and Live Band (SPB tribute)

Stalls: Snacks, Filter Coffee, Baadam Milk, Ice-cream, Sugarcane juice, and Henna.

Children's attraction : Jumping Castle, Balloon Artists

fireworks

Food: Traditional Tamil Dinner

**Key Contacts**

Mr. Karthik Ranganathan – 0404 407 800
Mr. Manikandan Shanmugasundaram – 0401 682 910







SOLITAIRE
REAL ESTATE

# DANDA னக்கா!

## ATA Student's Wing

**ATA வின் இளைஞர் பிரிவு 11.10.2020 அன்று துவங்கப்பட்டது**

**குறிக்கோள்கள்:** தமிழ் மொழி, கலாச்சாரம், பண்பாடு, மற்றும் பழக்கவழக்கங்களை இங்கு படிக்க வந்துள்ள மாணவர்களிடமும் வளர்ப்பது மற்றும் தக்கவைப்பது. இச்சங்கம், அவர்களின் நோக்கங்களை மேம்படுத்தவும் அவர்களின் சரியான தேவையை இப்பிரிவின் மூலம் கண்டறிந்து அதற்கு சங்கத்தால் முடிந்த ஆதரவை அவர்களுக்கு வழங்குதல்

.



| NAME | POSITION |
|---|---|
| Dharma Sekaran Kamaraj<br>Sivaprakash Murugan<br>Theepashree Sellappan | Student Coordinators |
| Gauthama Guevara<br>Sriram Krishnan<br>Arunaachalam Muruganantham<br>Vijayaraghavan Subbiah | Event Management Coordinators |
| Geethanjali M.S.<br>Sindhu Perumal | Finance Management Team |

**இங்கிலீஷ் ( சும்மா படியிங்க)**

ஊரில் ஆங்கிலத்தில் பேசும் நபர்களை எல்லாம் கண்ணால் பார்க்கவே முடியாத காலம்.. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஆங்கில வாத்தியார்கள் கூட ஆங்கிலத்தையே தமிழில் டைரக்ட், இன்டைரக்ட் ஸ்பீச்சை நேர்மறைக் கூற்று, எதிர்மறைக் கூற்று என்றுதான் சொல்லித் தருவார்கள். அதனால் சிறுவயதில் நான் வெள்ளைக்காரர்கள் மட்டுமே ஆங்கிலத்தில் பேசுவார்கள். நம்மாட்களுக்கு எல்லாம் ஆங்கிலத்தில் படிக்க மட்டுமே தெரியும், பேசத் தெரியாது என்றுதான் வெகுநாட்களாக எண்ணிக்கொண்டிருந்தேன்.

அப்போதைய தமிழ் சினிமாக்களின் கதாநாயகிகள் மிகவும கோபத்துடன், "யு ஸ்டுப்பிட்… இடியட்… ப்ளடி நான்ஸென்ஸ்", 'ஐ வில் கால் த போலீஸ்" என்று எச்சரிக்கை விடுப்பார்கள். நீதிமன்றக் காட்சிகளில் மிகவும் அடிக்கடி பயன்படுத்தும் மூன்று ஆங்கில வசனங்கள்: ஆர்டர் ஆர்டர் ஆர்டர், அப்ஜெக்ஷன் ஓவர்ரூல்டு, அப்ஜெக்ஷன் சஸ்டெய்ன்டு போன்ற டயலாக்குகளையே கேட்டு கேட்டுப் புளித்துப் போயிருந்த சமயத்தில்தான் என் திருமண நாள் வந்தது. தாலியெல்லாம் கட்டி முடிந்து மனைவியுடன் தனியாக நின்றிருந்தபோது மிகவும் பயந்த சுபாவமாக இருந்த என் மனைவியிடம், "ஸ்கூல், காலேஜ்ல்லாம் எங்க படிச்ச?" என்றேன். அவள் மிகவும் அடக்கமாக, " பிவிபி… ஸிபிஎஸ்இ ஸ்கூல்" என்றவுடன் எனக்கு வெலவெலத்துப் போய்விட்டது. என் இடுப்பில் கட்டியிருந்த வேட்டி லேசாக அவிழ்வது போல் தோன்ற, இறுக்கிக் கட்டிக்கொண்டு திகிலுடன் என் மனைவியைப் பார்த்தேன். எனது பயம் ஏதாவது சண்டை வந்தால் அவள் என்னை ஆஃப் செய்ய, தடாலடியாக கான்வென்ட் ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தால் நான் என்ன செய்வேன்? மனைவி ஆங்கிலத்தில் என்னுடன் சண்டை போடும் காட்சி மனக்கண்ணில் ஓடியது. பதிலுக்கு ஆங்கிலத்தில் பேசத் தெரியாமல் தவிக்கும் நான் வேறு வழியின்றி, ~~"இப்ப நான் என்ன சொல்லிட்டன்னு இப்படிக் கோச்சுக்குற… சரி விடு…" என்று சரண்டராகும் காட்சி மனதில் ஓட பீதியுடன் பார்த்தேன். என்னதான் இங்கிலீஷ் மீடியத்தில் படித்திருந்தாலும், சண்டையை எல்லாம் இங்கிலீஷில் போடுவது கஷ்டம்தான் என்று நினைத்துக்கொண்டேன்.

ஏறத்தாழ அதே சமயத்தில் திருமணமான என் நண்பன்; ஒருவன் ஒருநாள் என்னிடம், "எங்கம்மா அப்பாவுக்கு எதிர சண்டை வந்துச்சுன்னா, நானும், என் ஒய்ஃபும் இங்கிலீஷ்லதான் சண்டப் போட்டுக்குவோம்…" என்றான். ஆங்கிலத்தில் சண்டைப் போடவேண்டுமென்றால் எவ்வளவு ஆங்கில அறிவு இருக்கவேண்டும். 'எப்படிடா இங்கிலீஷ்ல சண்டைப் போட்டு கோபமா பேசிக்குவீங்க?' என்றேன். 'ம்… டோன்ட் டாக் டு மச்-' 'இதை நான் கூட பேசுவேன். வேற ஏதாச்சும்?' 'ஷட் யுவர் மவுத்…கெட் அவுட் ஃப்ரம் ஹியர்ன்னு சொல்லிட்டு, நான் வீட்ட விட்டு வெளிய வந்துடுவேன்" இந்த கெட் அவுட் எல்லாம் எங்க ஊரு தயிர்க்காரம்மாவே சொல்லும். அவங்கள கெட் அவுட்னு சொன்னா, அவங்கதானடா வெளியப் போகணும். நீ ஏன்டா வெளியப் போற?" என்றேன். அது அப்படித்தான் என்றான்! நம்ப தமிழ்ல சண்டைப் போடறப்ப மூச்சைக் கட்டிகிட்டு கோபமா பேசுவோம்ல - உதாரணத்துக்கு 'அப்படியே செவுள்ல ஒரு எத்து, எத்தினன்னா மூஞ்சு, முகரையெல்லாம் பேந்துடும். என் உயிர வாங்கன்னே வந்து வாச்சிருக்கு மூதேவி'… இதை எப்படி இங்கிலீஷ்ல சொல்லுவ? என்றவுடன் அவன் திருதிருவென்று விழித்தான்.

- Dr கோவிந்தசாமி ராஜன்


MANI
Musculoskeletal, Occupational & Sports
PHYSIOTHERAPY

**Who we see:**
We can support your patients through several different avenues including:
- Enhanced Primary Care Plans
- Department of Veterans Affairs
- Return to Work SA and MVA claims
- Private (including private health funds)
- NDIS

**Contact Us :** Mob: 0405 333 773 Fax: 08 8490 5533 Email: contact@maniphysio.com

**LOCATIONS: : North Adelaide** 22 Walter Street, North Adelaide 5006 **Salisbury :** 16 Frost Road, Salisbury 5108

# தெற்கு ஆஸ்திரேலியா தமிழ்ப் பள்ளி

## Thamizh School

**எல்லா புகழும் இறைவன் ஒருவனுக்கே**

அன்புடையீர்

தமிழர் குரலின் மூலமாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு உவகை அடைகிறேன். இந்த COVID 19 சூழ்நிலையால், தமிழ்ப்பள்ளி முதல் பருவத்தின் முடிவில் Zoom என்ற இணைய வழி பாடத்திட்டத்தில் இயங்கி இப்போது நான்காம் பருவத்தில் மீண்டும் நேர்முக வகுப்புக்களை ஆரம்பித்து உள்ளது. நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பதுபோல் நேர்முக வகுப்புகளின் அருமை பெருமைகளை பெரியோர் மட்டுமல்ல சின்னஞ்சிறார்களும் நன்குணர்ந்து மிக்க மகிழ்ச்சியுடன் பள்ளிக்கு வருகை தந்து கொண்டிருக்கிறார்கள்.

நாம் கடந்து வந்த இந்த இக்கட்டான காலகட்டத்தில் எங்களுக்கு பெரும் உதவியாகவும் ஆறுதலாகவும் இருந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றிகள் பல.

மேலும் தமிழர்குரல் மறுபடியும் மலர்ந்திருக்கும் இந்த இனிய வேளையில், இதற்கு காரணமான அனைவருக்கும் எங்கள் பள்ளியின் சார்பாக நல்வாழ்த்தை கூறி கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

தீபா கிறிஸ்டி - பள்ளி முதல்வர்

SATS committee members:

| NAME | POSITION |
|---|---|
| Theepha Christy | Principal |
| Alagar Raj Nallasamy | Parent Representative |
| Ramya Rajagopal | Teacher Representative |
| Ramachandran Duraisamy | Finance Admin |
| Jayakumar Bose | Parent Representative |
| Madhan Raj Ramasamy | Administrator |
| Senthil Rajan Chidambaranathan | Parent Organization Representative |
| Prabhu Francin Singaraj | Community Representative |

பள்ளி ஆண்டு விழா இந்த ஆண்டு டிசம்பர் 12, 2020 அன்று உட்வில் டவுன் ஹாலில் கொண்டாடப்படும்



எத்னிக் ஸ்கூல் பரேடில் (e-Concert) 18.10.2020 அன்று தமிழ்ப்பள்ளி மாணவர்கள் பங்கேற்றனர்



வாகை வானொலியில் நம் தமிழ் பள்ளி மாணவர்கள் பங்கேற்றனர்

mas
Tax Accountants
& Mortgage Brokers
Ravi Iyer, CPA
Mobile: 0433095080
1300627829
www.mastax.com.au

Our Services Include:
TAX RETURNS / ACCOUNTING
COMPANY FORMATION
MORTGAGE BROKING
HOME LOANS
INVESTMENT LOANS
REFINANCE OF HOME LOANS / INVESTMENT LOANS
FINANCIAL PLANNING
INSURANCES

SAI Properties
South Australia Investments and Properties
Buy | Sell | Invest |
Property Management Company
South Australia Investments and Properties Pty Ltd.
5 Queen Street Pennington SA – 5013
RLA 296151 | ABN 13643413183 | ACN 643413183
M : 0451980275 | 0415453335
Email : saicare@saiproperties.com.au
www.saiproperties.com.au

Alete HOMES
We build quality houses in half the time of traditional, mainstream builders with higher quality finishes.
11D Metro Parade,
Mawson Lakes, SA 5095
08 8359 5401 (OFFICE)
04 3277 4670 (OFFICE)
sales@aletehomes.com.au

# TAMIZHANDAA!

## சாதனையாளர்




நமது அடிலெய்டு தமிழ் சங்கத்தின் மாணவர் பிரிவைச் சார்ந்த திரு தர்மா என்பவர் பூப்பந்து விளையாட்டில் ஒரு சாதனையாளர். விருதுநகரை சேர்ந்த இவர் 10 வயது முதல் பூப்பந்து விளையாட்டில் ஆர்வம் கொண்டு தொடர்ந்து விளையாடி வருகிறார். இவர் பத்தாம் வகுப்பில் படிக்கும்போது தமிழக அணியிற்காக விளையாடி தங்க பதக்கம் வாங்கி இருக்கிறார். சமீபத்தில் அடிலெய்டில் நடந்த பூப்பந்து போட்டிகளில் இவர் ஆண்கள் தனிப்பிரிவில் சாம்பியன்ஷிப் கோப்பையை வென்றார். இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் போட்டியில் இவர் இரண்டாம் இடம் பெற்றார் என்பது பெருமைக்குரியது.




## திருக்குறள் பகுதி

அதிகாரம்: ஒப்புரவு அறிதல்

குறள் எண்: 211

**குறள்: கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு**
**என் ஆற்றுங் கொல்லோ உலகு.**

விளக்கம்: மழையைப் போல் கைம்மாறு கருதாமல் ஒற்றுமையாய் செயல்பட்டால் இந்த உலகில் எதையும் சாதிக்கலாம்

**தமிழ் வாழ்க**

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி நம் தமிழ் மொழி. ஆதியில் கீறல்களாக, வரி எழுத்தாக தோன்றிய தமிழ் பிராமி எழுத்துக்கள் பிற்காலத்தில் வளைவுகளுடன் கூடிய வட்டெழுத்தாக உருமாறி தற்பொழுது நாம் பயன்படுத்தும் எழுத்து முறையாக உருமாறிய காலத்தின் பயணம் மிக மிக நெடியது !!!!!.

மதுரை கீழடியில் கிடைத்திட்ட தமிழ் பிராமி எழுத்தின் வயது சுமார் 2600 ஆண்டுகள் என்றால், முதல் எழுத்து எப்பொழுது தோன்றியிருக்கும் என்றால் ஆச்சரியம் தான் மிஞ்சுகிறது. இன்னும் எழுத்து வடிவம் இல்லாமல் எத்தனையோமொழிகள் பேசப்படுகின்றன, இரவல் மொழி வடிவம் பெற்று சில மொழிகள் உள்ளன. மொழியின் பலம் என்பது இயல், இசை மற்றும் கூத்து என்ற நாடகம், இம் மூன்றிலும் தமிழ் சங்க காலம் தொட்டு சிறந்து விளங்குகிறது. சிறந்த தமிழ் இலக்கிய நூல்கள் தமிழரின் வாழ்வியலை, வீரத்தை, நீதிநெறியை, மானுடத்தை, காதலை, ஊடலை, வீரவிளையாட்டை, போர்களை, ஆட்சிமுறையை, கட்டிடக்கலையை, மங்கையரின் வீரத்தை, மானத்தை, தொழிலை, இயற்கையை, உயிர் நேயத்தை இன்றும் நாம் அறிந்து கொள்ள சாட்சியாக நிற்கின்றது.

தமிழரின் வாழ்வியல் பெருமையாக சல்லிக்கட்டும் அதை சார்ந்த ஆற்றுப் பாசனம் முதல் ஊற்று பாசனம் வரை சிறப்பாக அமைந்த இயற்க்கை வேளாண் வாழ்க்கை முறையும். தமிழுக்கு இணையாக தோன்றிய மொழிகள் அழிந்து விட்ட நிலையில், உயிர்ப்புடன் பானை ஓட்டு கீறலில் இருந்து இன்றைய தொடுதிரை கணினி வரை தமிழ் வாழ்கின்றது. காலத்திற்கு ஏற்றாற்போல் தன்னைத்தானே செதுக்கி கொள்ளும் வலிமை தமிழுக்கு உண்டு.

நவீன கண்டுபிடிப்புகளின் பெயர்களை ஆங்கிலத்தின் வழியில் மற்றமொழிகள் பயன்படுத்தும் போது தமிழ் மட்டுமே புதிய சொல்லை தனக்குள் இருந்ததே உருவாக்கி கொள்கின்றது. உலகத் தமிழர்கள் இப் பாரெங்கும் தமிழை தாங்கிப் பிடிக்கிறார்கள்.

வாழ்க தமிழ், வளர்க வையகம்
ராஜீ ரங்கநாதன்

## ஆண்ட்ரு போனிபேஸ்

**அதிகம் படித்து வெற்றி பெற**
**அடிலைட் மாநகருக்கு வந்த**
**அன்புத் தம்பியே ஆண்ட்ரூவே**
**படித்த பல்கலைக்கழகத்திலும்**
**பகுதி நேரப் பணியிடத்திலும்**
**பழகிய நண்பர்களிடத்திலும்**
**பாராட்டை பெற்று விட்டு**
**பார் போற்ற வாழாமல்**
**பறந்தோடி மறைந்தாயே**
**ஆண்டவனில் உன் ஆன்மா**
**அமைதி பெற்று இளைப்பாற**
**ஆஸ்திரேலியாவிலிருந்து**
**கண்ணீரோடு**
**ஆண்ட்ருவை அனுப்புகிறோம்**
**அடிலைட் மக்கள் நாங்கள்**



ஆன்ட்ரூவின் உடல் தமிழகத்துக்கு எடுத்துச்செல்ல அடிலைட் தமிழ்ச்சங்கம் $16,855 வரை சேகரித்து உதவியது. இதில் பங்கு கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் இத்தமிழ்ச்சங்கம் நன்றி கூறுகின்றது. மேலும் திரு ஆண்ட்ரூ அவர்கள் குடும்பத்தினருக்கு தமிழ்ச்சங்கம் ஆழ்த்த அனுதாபத்தை தெரிவிக்கின்றது.

# இன்ஸ்டாகிராம் காலத்தில் இதிகாசம்

**வள்ளுவனும், ஹராரியும்**

யுவல் நோவா ஹராரி (Yuval Noah Harari), கடந்த சில வருடங்களாக பலராலும் அறியப்பட்ட எழுத்தாளர். அவரது புத்தகங்கள் 21 Lessons for the 21st Century, Sapiens மிகவும் பிரபலமானவை. தற்கால சமூகம் பின்பற்றும் பல்வேறு பழக்கங்களை, நம்பிக்கைகளை வேரோடும், வேரடி மண்ணோடும் மாற்றும் வகையில் அவரது எழுத்துக்கள் வாசகர்களை சிந்திக்க வைக்கும். குறிப்பாக கி.பி 2050ல் வாழப்போகும் குழந்தைகள் வளர்த்துகொள்ள வேண்டிய திறன்களை அவர் பட்டியலிடுகிறார் (21 Lessons for the 21st Century). அதில் ஒன்று: பல்வேறு தளங்களிலிருந்து வரும் ஒரு செய்தியின் உண்மைத்தன்மையை பகுத்தும், தொகுத்தும் அறிந்து கொள்ளும் திறன். ஒரு காலத்தில் மாணவர்களுக்கு தகவல்களை கொடுப்பதே ஒரு ஆசிரியரின் வேலை. இன்று தகவல்கள் மாணவர்களின் விரல்நுனியில் இருக்கின்றன. ஆனால் அவற்றில் எது உண்மை என அறிந்து கொள்வதே சவாலான விடயம். இத்திறனை வளர்த்துக் கொள்ளும் குழந்தை எதனையும் பகுத்தறிந்து புரிந்து கொள்ளும். சமூக ஊடகங்களில் வரும் அனைத்தையும் நம்பாது. இது போன்ற திறன்களை வளர்த்துக்கொள்ளும் குழந்தைகளே தலைமைப் பொறுப்பிற்கு வருவார்கள்.

நிற்க. இதைப்படிக்கும் பொழுது ஏதோ புதிய தகவல் போல் தோன்றும். ஆனால் நம் வள்ளுவன் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நமக்கு அருளிய திருக்குறளிலேயே உள்ளது.

அதிகாரம்: அறிவுடைமை குறள் எண் 423

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

விளக்கம்: எப்பொருளை யார் யாரிடம் கேட்டாலும் (கேட்டவாறே கொள்ளாமல்) அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.

அதிகாரம்: மெய்யுணர்தல் குறள் எண் 355

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

விளக்கம்: வெளித்தோற்றத்தைப் பார்த்து ஏமாந்து விடாமல், அதுபற்றிய உண்மையை உணர்வதுதான் அறிவுடைமையாகும்.

இந்த இரண்டு அதிகாரங்களிலும், அவர் அறிவுடைமை, மெய்யுணர்தல் சார்ந்தே சொல்லி இருக்கிறார். திருக்குறள் ஒரு உலகப் பொதுமறை என்பதற்கு இதைவிட சரியான உதாரணம் வேண்டுமோ! திருக்குறள் மானுட சமூகத்திற்கு வள்ளுவன் வழங்கிய மாபெரும் கொடை. அதை நமக்கு வழங்கிய வள்ளுவனையும், பல தலைமுறைகளாக பாதுகாத்து நம்மிடம் வழங்கிய முன்னோர்களையும் போற்றுவோம். அடுத்த தலைமுறைக்கும் கொண்டு சேர்ப்போம்.

பி.கு :

https://forge.medium.com/yuval-noah-harari-21-lessons-21st-century-what-kids-need-to-learn-now-to-succeed-in-2050-1b72a3fb4bcf

- அழகர் ராஜ்

# நோயற்ற வாழ்வு



**சிம்பிளா இருந்தா ஜம்முனு இருக்கலாம்**

உடல் நோய்களையும் மன அழுத்தத்தையும் வரும் முன்னரே தடுக்க முடியும் என்பதற்கான ஒரு சக்தி வாய்ந்த தடுப்பு மருந்து Micro living / Macro benefit என்ற வழிமுறை. அது என்ன மைக்ரோ லிவிங் / மேக்ரோ பெனிஃபிட் என்கிறீர்களா? அது நம் முன்னோர்கள் கூறிய 'சிறுகக்கட்டி பெருக வாழ்' என்ற அறிவுரையின் உட்கருத்துதான்!!

பண்பாட்டு அசைவுகள், கலாச்சார மோகம், மிகவும் பதற்றமான வாழ்க்கை, வரம்பு மீறிய ஆசைகள், கிடைத்ததை கொண்டாடாமல் இல்லாததற்கு திண்டாடுவது போன்ற பல்வேறு விஷயங்களை சமாளிக்க ஓய்வில்லாமல் ஓடி ஓடி உழைப்பது, வருமுன் காக்கத்தவறும் எண்ணமின்மை, தகுதியின் அளவுக்கு மீறிய செலவு / கடன் போன்றவை பல உடல் /மன நல நோய்களுக்கு மூல காரணம். மூல காரணங்களுக்கு தீர்வு சொல்லும் மந்திரக்கோல்தான் மைக்ரோ லிவிங் என்னும் எளிய வாழ்க்கைமுறை ஃபார்முலா. சின்னச்சின்ன மாற்றங்கள்தான். முயன்றுதான் பாருங்களேன்.

எளிமையான உடல் / மன பயிற்சிகள், பழக்கங்கள்:

தினமும் 10 - 30 நிமிடங்கள் வரை சிரித்த முகத்துடன் நடை பயிற்சி. நடந்து செல்லக்கூடிய தூரமாயிருந்தால் நடந்தே செல்வது. எந்த சிந்தனைகளும் இன்றி 10 நிமிடங்களாவது அமைதியாக கண்களை மூடி அமர்வது. புதிர்கள் நிறைந்த விளையாட்டுகளை சிறிது நேரம் விளையாடுவது. மனதுக்குப்பிடித்த புத்தகங்களை படிப்பது. தினமும் ஏழு மணி நேரம் உறங்குங்கள் என்று சொல்லப்பட்டாலும் உடல் / மன அமைதியளவுக்கு உறக்கம். வாழ்க்கைக்கு புத்துணர்வளிக்கும் தியானம், யோகா மற்றும் மனதுக்கு நிறைவு தரும் வழிபாடுகள். ஊட்டமுள்ள உணவை அளவோடு உண்ணுவது. இந்த மாதிரியான எளிய வாழ்க்கைமுறை தத்துவநெறிகள் இப்போது மக்கள் மனதில் அசைபோடுவதுபோல் தோன்றியும் மறைந்தும் கொண்டுள்ளன.

நம் எல்லோர் உள்ளும் உன்னதமான ஆற்றல் மறைமுகமாக இருப்பதை உணர்ந்து எதிர்மறை எண்ணங்களை துறந்து நேர்மறை எண்ணங்களை உருவாக்கி வாழும் வாழ்க்கைதான் சிறப்பானது. மற்றவர்களின் வாழ்க்கையுடன் ஒருபோதும் ஒப்பிட்டு பார்க்காதீர்கள். எவரையும், எதற்காகவும், எந்த சூழ்நிலையிலும் அன்புடன் அனைக்க எண்ணுங்கள். வாழ்வின் உன்னதம் உங்கள் வசம் என்று தின்னமாக நம்புங்கள். வாழ்க்கையை 'டேக் இட் ஈசி' யாக எடுத்துச்செல்லும் மனப்பான்மையே என்றும் பயனுள்ளது.

எல்லோருக்கும் தேவைகள் குறைவுதான். ஆசைகள்தான் அதிகம். தேவைகளை எளிமையாக்குங்கள். எளிய வாழ்க்கை முறைகளைத் தேர்ந்தெடுக்கும்போது நம் தேவைகள் எளிதாக நிறைவேறும். உடல் அல்லல்கள், மன அழுத்தங்கள் நம்மை ஆட்டிப் படைக்காது.

சிம்பிளா இருந்தா ஜம்முனு இருக்கலாம்தானே!!

- Dr கோவிந்தசாமி ராஜன்

**Romeo James Colaco**

Tel: +61 8 8266 6745
Fax: +61 8 8266 4350
Mob: +61 413 187332

Unit 4/19, Ways Road
Hampstead Gardens SA 5086

APR FINANCIAL SERVICES

We specialise in

**LOANS**

and

**FINANCIAL PLANNING**



# Hon. JING LEE MLC

Working for all South Australians.

**Message from the Honourable Jing Lee MLC**
**Assistant Minister to the Premier**
**Adelaide Tamil Association**

On behalf of the Government of South Australia, I wish to extend my warmest greetings and best wishes to the Adelaide Tamil Association as you hold your annual Deepavali celebrations on Saturday 21st November 2020. Deepavali, also known as Diwali or the Festival of Lights, celebrates the symbolic victory of light over darkness, knowledge over ignorance, and good over evil. 2020 has been a challenging year for us all and this heart-warming message of hope and triumph is more important than ever during this time. While the COVID-19 pandemic has changed how we interact with each other and hold events, we continue to value and celebrate our important traditions in new ways. I wish to congratulate President Joseph Xavier and the hard-working committee and volunteers of the Adelaide Tamil Association for the dedication and creativity you have shown in holding this year's event in a COVID Safe way. The Government of South Australia is proud to support this year's Deepavali celebration. This auspicious festival is celebrated by millions of people around the world and is one of the many cultural highlights that is now generously shared and embraced by the wider South Australian community. Thank you to everyone in the Tamil community for your contributions to enriching our multicultural state and for your ongoing generosity and dedication to serving our community. May the light of millions of lamps brighten your lives and bring you and your loved ones endless joy, prosperity and good health. Happy Deepavali!

The Honourable Jing Lee MLC
*Assistant Minister to the Premier*
*Member of the Legislative Council of the South Australian Parliament*



சங்கப் பொறுப்பாளர்கள் மாண்புமிகு ஜிங் லீ அவர்களை 28.10.20 அன்று அடிலைட் பாராளுமன்ற அலுவலகத்தில் சந்தித்த போது.



# Mr Joe Szakacs



சங்கப் பொறுப்பாளர்கள் திரு ஜோ சகாக்கஸ் அவர்களை 24.09.20 அன்று அடிலைட் பாராளுமன்ற அலுவலகத்தில் சந்தித்த போது.

Happy Deepavali!

May this festival of lights bring you all an abundance of happiness, prosperity and good fortune. 2020 has been a challenging year for everyone but as we gradually transition to a new COVID Safe 'normal', I'm so glad your community can come together and rejoice at this special time, celebrating the victory of good over evil.

**Joe Szakacs MP**
Member for Cheltenham
Assistant Shadow Minister to the Leader
Assistant Shadow Minister for Multicultural Affairs




கடந்த செப்டம்பர் மாதம் 28ம் தேதி சங்கப் பொறுப்பாளர்கள் சார்லஸ் ஸ்டர்ட் மேயர் வணக்கத்திற்குரிய ஏஞ்சலா இவன்ஸை சந்தித்த போது.



கடந்த 18.10.20 அன்று சாலீஸ்பரி மேயர் வணக்கத்திற்குரிய கில்லியன் ஆல்ரிட்ஜ் மற்றும் துணை மேயர் வணக்கத்திற்குரிய ஷாட் புஜன் இருவரையும் சங்க நிர்வாகிகள் சந்தித்தனர்.

**Authorised by Chris Antony, Secretary,**
**ADELAIDE TAMIL ASSOCIATION**
**PO box 618, North Adelaide, SA 5006**
**Website: www.adelaidetamil.com.au , secretary@adelaidetamil.com.au**